அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education
VAAN MUHIL
15, Kavitha Nagar, Maharaja Nagar Post, Tirunelveli – 627011, Tamil Nadu


## குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் மாவட்ட தொடக்க விழாவிற்கான

# வழிகாட்டுதல்கள்

### 1. எப்போது?:

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் மாவட்ட தொடக்க விழாவுக்கான நாள் – நேரத்தை அந்தந்த அமைப்புகள் ஆலோசித்து அதனை மாநில ஒருங்கிணைப்புக்குழுவுடன் கலந்து பேசி இறுதி செய்து கொள்ள வேண்டுகிறோம். இத்தொடக்க விழாவினை அக்டோபர் மாதம் இறுதிக்குள் ஏதேனும் ஒரு நாளில் நடத்திட வேண்டுகிறோம்.

### 2. எங்கே?:

நிகழ்வுக்குப் பொருத்தமான இடத்தினை அந்தந்த அமைப்புகளே முடிவு செய்யலாம். மாவட்ட தலைநகரங்களில் மையமான பகுதியில் ஏற்பாடு செய்தால் மாவட்ட அளவிலான குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் பங்கேற்க ஏதுவாக இருக்கும். இருப்பினும் உள்ளூர் சூழலை கணக்கில் கொண்டு குழந்தைகளின் கூடுதல் பங்கேற்பை ஊக்கப்படுத்தும் விதமாக ஏதாவது ஒரு கிராமத்தில் நிகழ்வை ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் எனக் கருதினால் அவ்வாறே திட்டமிடலாம். நிகழ்வு நடைபெறும் இடம் அரங்கமாகவோ அல்லது திறந்தவெளியாகவோ இருக்கலாம்.

### 3. நிகழ்வு ஒருங்கிணைப்பு:

தொடக்கவிழா நிகழ்வினை அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், வான்முகில், திருநெல்வேலி அமைப்பும் தங்கள் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திட வேண்டுகிறோம். இதனை "குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் மாவட்டத் தொடக்க விழா" எனும் பெயரில் ஒருங்கிணைப்பது அவசியம். தாங்கள் வேறு பெயரில் நடத்த விரும்பினால், பொருத்தமான பெயர்களில் நடத்தலாம்.

### 4. பதாகைகள் (Flex) :

தொடக்கவிழா அரங்கில் கீழ்க்கண்ட பதாகைகள் வெளியிடுவது, பின் காட்சிப்படுத்துவது அவசியம்.

a) மன்றப் பெயர்பலகையினை 4 அடி நீளம் - 3 அடி அகலம் (4 x 3) உள்ள அளவில் பிளெக்ஸில் பிரிண்ட் எடுத்து அதனை பொருத்தமான மரம் / இரும்பு பட்டைகளில் இணைத்து, துணியினால் மறைத்து ரிப்பன் கட்டி நிகழ்வு அரங்கில் வைத்திட வேண்டுகிறோம். சிறப்பு விருந்தினர் ஒருவரால் முறையாக அதனை திறந்து வைத்திட செய்யலாம். பகுதி சூழல் கருதி இந்த அளவினை மாற்ற விரும்பினால் 4 x 2 அளவுகளில் மாற்றிக் கொள்ளலாம்.

b) உறுதிமொழி பதாகையினை 2½ அடி நீளம் - 2 அடி அகலம் (2½ x 2) உள்ள அளவில் "பிளெக்ஸில்" அல்லது "கடின அட்டையில்" பிரிண்ட் எடுத்து அதனை சுருட்டி ரிப்பன் கட்டி, ஒரு சிறப்பு விருந்தினர் மூலம் வெளியீடு செய்யலாம். இதேபோல், குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, முகப்புரை, கொரோனா பாதுகாப்பு நடத்தை முறைகள் ஆகியவற்றையும் வெளியிடலாம்.

## 5. யாரெல்லாம் பங்கேற்கலாம்?:

இத்தொடக்கவிழாவில் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 10 மன்றங்களின் குழந்தைகள், பெற்றோர், குடிமைச்சமூக அமைப்புகள், உள்ளூர் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், பெண்கள் அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்க அழைப்பு விடுக்கலாம். மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பாக யாரேனும் ஒருவர் அல்லது இருவர் பங்கேற்பார்கள்.

## 6. சிறப்பு அழைப்பாளர்கள்:

மாவட்ட தொடக்க விழாவிற்கு அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் அனைத்து குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்கள் (DCPU, CWC, SPJU, DSWO), மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலர், குழந்தை உரிமைக்காக செயலாற்றும் தோழமை அமைப்புகள், உளவியல் நிபுணர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோரை அழைக்கலாம். மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பது கூடுதல் சிறப்பைத் தரும். வாய்ப்புள்ள மாவட்டங்களில் இதனை பரிசிலிக்கலாம். தங்கள் மாவட்டத்தில் உள்ள தங்களுக்கு அறிமுகமான நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை இத்தொடக்கவிழா நிகழ்விற்கு அழைப்பது சாலச்சிறந்தது.

## 7. நிகழ்ச்சி நிரல்:

தொடக்க விழா நிகழ்ச்சி நிரலை மாவட்ட அமைப்பு தயார் செய்திட வேண்டுகிறோம். இறுதி செய்யப்பட்ட நிகழ்ச்சிநிரல் அழைப்பிதழை மாநில ஒருங்கிணைப்புக்குழுவிற்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அனுப்பிட வேண்டுகிறோம்.

## 8. தகவல் பரப்புரையும் ஊடகத்தொடர்பும்:

மாவட்ட தொடக்கவிழா நடைபெறுவது குறித்த பரப்புரையை சமூக ஊடகங்களில் மேற்கொள்வது நன்றாக இருக்கும். தொடக்கவிழா குறித்த ஊடகச் செய்தியை முன்னரே தயார் செய்து ஊடகங்களுக்கு அழைப்பிதழோடு அனுப்பிடலாம். தொடக்கவிழா முடிந்ததும் நிகழ்வு தொடர்பான நிழற்படங்கள் இணைக்கப்பட்ட ஊடகச் செய்தியினை தயார் செய்து அதனை ஊடகவியலாளர்களுக்கு அனுப்பிடலாம். இந்த ஊடக செய்தியினை அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், வான்முகில், திருநெல்வேலி அமைப்பும் தங்கள் அமைப்பும் இணைந்து வழங்கிட வேண்டுகிறோம்.

## 9. செலவுத் தொகையை பெறும் முறை:

மாவட்ட தொடக்கவிழா செலவினங்களுக்கு அதிகபட்சமாக ரூ.8000/- வரையிலான செலவுத் தொகைக்கான ரசீதுகளை வான்முகில் அமைப்பிற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இதனோடு நிகழ்வு அறிக்கை (தமிழ் / ஆங்கிலம்), நிழற்படங்கள், பத்திரிக்கையில் வெளிவந்த செய்திகளின் அசல் பிரதி உள்ளிட்டவைகளை இணைத்து அனுப்பிட வேண்டுகிறோம். தங்களிடமிருந்து செலவின கணக்கு விவர அறிக்கை பெறப்பட்ட நாளில் இருந்து ஐந்து வேலை நாட்களுக்குள் செலவினத் தொகை தங்களது வங்கிக் கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்படும்.

## தொடர்புக்கு

**கா.கணேசன்**
மாநில ஒருங்கிணைப்பாளர், வான்முகில்
6382329079 / 9994368503

**எம்.ஏ.பிரிட்டோ**
இயக்குநர், வான்முகில்
9442618117